கழக வெளியீடு: க[illegible]

வழிபாட்டுக்குரிய

தேவாரத்திரட்டு



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை - 1.

பதிப்புரை

எழுவகைப் பிறப்பினும் விழுமியது மக்கட் பிறப்பு. இப் பிறப்பே வழி அறியும் ஆறறிவுள்ளது. அதற்குத் துணையாம் மொழி வழங்கும் மொய்ம்பும் பெற்றது. நூலுணரும் சால்பு வாய்ந்தது. கூடிவாழும் பீடு உடையது. நல்லொழுக்க நெறியில் செல்லும் நன்மை வாய்ந்தது. மடன் அகற்றும் கடவுட்டொழுகையைத் திடமுடன் கொண்டொழுகிச் சிறப்பெய்தும் செம்மை வாய்ந்தது. "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும்" தந்தருளிய தலைவனை மறவாது தொழும் தகைமை வாய்ந்தது. தொழும் பேற்றால் செய்ந்நன்றி மறவாச் சீர்மையுடையது.

இத்தகைய அரும் பெறல் பிறப்பை எய்திய நாம் அதனைத் தந்தருளிய விழுமிய முழுமுதற் கடவுளைக் காலந்தவறாது தொழுதல் வேண்டும். அதற்குரிய வழிவகைகளை வகுத்தருள்வது தெய்வத் திருவருள் கைவந்த நாயன்மார் முதலிய செந்தமிழ்ச்சான்றோர் பாடிப் பராவியருளிய திருமுறை முதலாம் தெய்வப் பனுவல்களாகும்.

அப்பனுவல்கள் 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி'களாகும். ஓதுவாரும் கேட்பாரும் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து இன்புற்றுய்யும் எழில் நல்குவதாகும். அளவிறந்த அத் திருப்பாடல்களுள் சிறந்த பாடல்களைத் தொகுத்து இந்நூல் வடிவில் வெளியிட்டுள்ளோம். இதனை வீட்டு வழிபாட்டிலும் திருக்கோவில் வழிபாட்டிலும் சேர்ந்தும் தனித்தும் ஓதி இறையருள்பெற்று இன்புறுவார்களாக. வழிபாட்டின் உயிர் திருப்பாட்டு ஓதுதலே. கடவுட்கு உவந்ததும் திருப்பாட்டே. ஓதியும் ஓதுவித்தும் உய்வார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அப்பர் அச்சகம், சென்னை-1—IV E. C. 12200-12-54.

ஓம்

வழிபாட்டுக்குரிய

தேவாரத்திரட்டு

திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் வணக்கம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. 1

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 2

பிரான் வணக்கம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 3

அம்மை வணக்கம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. 4

முருகன் வணக்கம்

சமர சூரபன் மாவைத் தடிந்தவேல்
குமரன் தாதைநற் கோழம்ப மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாள்வுடை யார்களே. 5

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 6

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி. 7

சிவபிரான் வணக்கம்

[தேவாரம்]

சம்பந்தர் - குருவருள்

தோடுடை யசெவி யன்விடை யேறிஓர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி பூசிஎன் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடை யபிர மாபுர மேவிய பெம்மான்இவன் அன்றே. 8

முற்றலா மையிள நாகமோ டேன முளைக்கொம் பவைபூண்டு
வற்றலோ டுகல னுப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல்கேட் டலுடை யார்பெரி யார்கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றமூர்ந் தபிர மாபுர மேவிய பெம்மான்இவன் அன்றே. 9

அருநெறி யமறை வல்லமு னிஅகன் பொய்கை அலர்மேய
பெருநெறி யபிர மாபுர மேவிய பெம்மான் இவன்தன்னை
ஒருநெறி யமனம் வைத்துணர் ஞானசம் பந்த னுரைசெய்த
திருநெறி யதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 10

அப்பர் - குருவருள்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
 கொடுமை பலசெய் தனநான் அறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
 பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
 குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
 வீரட் டானத் துறையம் மானே. 11

நெஞ்சம் உமக்கே இடமா கவைத்தேன்
 நினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் இதுவொப் பதுகண் டறியேன்
 வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னை நலி வதனை
 நணுகா மல்துரந் துகரந் துமிடீர்
அஞ்சே லுமென்னீர் அதிகைக் கெடில
 வீரட் டானத் துறையம் மானே. 12

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
 புரங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தான் அரக்கன் தனைமால் வரைக்கீழ்
 அடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
 என்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
 வீரட் டானத் துறையம் மானே. 13

சுந்தரர் - குருவருள்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை [யுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்அருள் துறை
அத்தாஉனக் காளாயினி அல்லேன்என லாமே. 14

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆயாஉனக் காளாயினி அல்லேனென லாமே. 15

காரூர்புனல் எய்திக்கரை கல்வித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெ நல்லூர்அருள் துறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 16

சம்பந்தர் - திருநீற்றுப்பதிகம்

மந்திர மாவதும் நீறு வானவர் மேலதும் நீறு
சுந்தர மாவதும் நீறு துதிக்கப் படுவதும் நீறு
தந்திர மாவதும் நீறு சமயத்தில் உள்ளதும் நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 17

வேதத்தில் உள்ளதும் நீறு வெந்துயர் தீர்ப்பதும் நீறு
போதந் தருவதும் நீறு புன்மை தவிர்ப்பதும் நீறு
ஓதத் தகுவதும் நீறு உண்மையில் உள்ளதும் நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 18

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 19

சம்பந்தர் - அஞ்செழுத்துண்மை

காதல் ஆகிக் கசிந்துகண் நீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 20

நம்பு வாரவர் நாவின் நவிற்றினுல்
வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னூர்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 21

நந்தி நாம நமச்சிவா யவெனுஞ்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 22

அப்பர் - அஞ்செழுத்துண்மை

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 23

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 24

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்கண் இல்லையே. 25

சுந்தரர் - அஞ்செழுத்துண்மை

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே. 26

இட்டனும்மடி யேத்துவார்இகழ்ந் திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை என்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே. 27

கோணியபிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப் பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத் தாரனைப்படப் பாம்பரை
நாணனைத் தொண்டன் ஊரன்சொல்லிவை சொல்லுவார்க்
[கில்லை துன்பமே. 28

சம்பந்தர் - திருநெல்வேலி

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும்அவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்று
[பைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே.

என்றுமோ ரியல்பின ரெனநினை வரியவர் ஏறதேறிச்
சென்றுதாஞ் செடிச்சியர் மனைதொறும் பலிகொளும் இயல்பதுவே
துன்றுதண் பொழில்நுழைந் தெழுவிய கேதகைப் போதளைந்து
தென்றல்வந் துலவிய திருநெல்வே லியுறை செல்வர்தாமே. 30

பெருந்தண்மா மலர்மிசை அயனவன் அனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வே லியுறை செல்வர்தம்மைப்
பொருந்துநீர்த் தடமல்கு புகலியுள் ஞானசம் பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியா டக்கெடும் அருவினையே. 31

சம்பந்தர் - திருக்குற்றாலம்

வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடலமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள். 32

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 33

மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே. 35

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே. 36

அப்பர்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன். 37

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

சுந்தரர்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 39

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 40

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேஎந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையும் ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்கு யாதும் ஐயுற வில்லையே. 41

அப்பர் - திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாய் என்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே. 42

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் உறவேயென் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே. 43

சம்பந்தர் - கோளறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 44

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்

கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 45

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 46

சுந்தரர்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 47

திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானன் சாழலோ. 48

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்

செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 49

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 50

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 51

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 52

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோன் அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

திருமந்திரம்

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 54

பதினோராந் திருமுறை

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். 55

திருத்தொண்டர் பெரியபுராணம்

மறவாமை யானமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார். 56

உமாதேவியார் வணக்கம்

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம்போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட்
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி. 57

திருமால்

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி யேத்துவாம். 58

திருமகள்

திரண்டு முனிவர் இருபாலுஞ் சிறந்து தினமுஞ் சேவிப்ப
வரந்தந் தருளும் பெண்கொடியை வடிவேற் குமரன் மணக்கோலம்
புரிந்த அழகை இருவிழிக்கு விருந்தா யருந்தும் புத்தமுதைப்
பரங்குன் றமர்ந்த செழுந்திருவைப் பணிந்து திருவைப் பொருந்துவாம்.

கலைமகள்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். 60

நந்திதேவர்

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லா முதற்குரு நாத னாகிப்
பங்கயத் துளவ நாறும் வேத்திரப் படைபொ றுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி. 61

நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. 62

அறுபத்துமூவர்

தத்து மூதெயில் மூன்றுந் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம். 63

திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே

மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே. 64

கருப்பத் தூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தனுபூதி
சிறக்கப் பாவித் தருள்வாயே
பரப்பற் றருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே. 65

பாதிமதி நதி போதுமணிசடை நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள் மாயனரிதிரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு காலில்வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல காளும்வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினி லேறியமரர்கள் சூழவரவரு மிளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு வாமிமலைதனி லுறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட வேலைவிடவல பெருமாளே. 66

சண்டீசர் வணக்கம்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனு டைகள்பிறவும் வேறு தமக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை யடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளும் தூயோ னடித்தா மரைதொழுவாம்.

பட்டினத்தார்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. 68

தாயுமானவர்

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்குந் தலைவ நின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோம் கண்டாய் பூரணா னந்த வாழ்வே. 69

இராமலிங்க சுவாமிகள்

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத பெருந்தவ ருள்ளக்
கோயி லிருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்
தனி நட ராசவென் சற்குரு மணியே. 70

வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 71

திருச்சிற்றம்பலம்

